## உயிரிழந்த மாற்றுத்திறனாளி குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் வழங்குங்கள்

# உண்மை சம்பவங்களை விமர்சனம் செய்தால் பொய் வழக்கு போடுவதா?

## எடப்பாடி கண்டனம்

சென்னை, ஜன.18

உண்மை சம்பவங்களை விமர்சனம் செய்பவர்கள் மீது பொய் வழக்கு போடுவதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 8 மாத கால தி.மு.க. ஆட்சியில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து போயுள்ளது கண்டு மக்கள் கொதிப்படைந்துள்ளனர். குற்றச்செயலில் ஈடுபடுபவர்களும், சமூக விரோதிகளும், பொது வெளியில் காவல் துறையினரிடம் மரியாதை குறைவாக நடப்பது மிகவும் அதிகரித்துள்ளது.

அரசியல் அழுத்தம், பொது வெளியில் ஒருசில காவலர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், சுதந்திரமாக செயல்பட முடியாத நிலைமை, உயர் அதிகாரிகள், நிலுவையில் உள்ள வழக்குகள் மீது விரைவாக முடிவு காணுங்கள் என்று தனக்கு கீழ் உள்ள போலீசாருக்கு அழுத்தம் தருதல் போன்றவற்றால் பாதிக்கப்படும் போலீசார், போலீஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துவரப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தங்களது வெறுப்பை காட்டும் நிலைமை ஏற்படுவதாக உளவியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

8.1.2022 அன்று சேலம் மாவட்டம், கருப்பூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பிரபாகரனை, வழக்கு சம்பந்தமாக நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் போலீசார் விசாரணைக்கு அழைத்து சென்றதாகவும், பிறகு 11-ந்தேதி அவரை கைது செய்து நாமக்கல் கிளை சிறையில் அடைத்ததாகவும், 12-ந்தேதி காலை மாற்றுத்திறனாளி பிரபாகரன் உடல்நிலை மோசமடைந்ததால், அவரை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்ததாகவும், அன்றே அவர் உயிரிழந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையில் இறந்தவரின் உடலை உறவினர்கள் வாங்க மறுத்ததுடன், மாற்றுத்திறனாளியின் இறப்புக்கு காரணமான போலீசார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சேலம் சரக டி.ஐ.ஜி., சேந்தமங்கலம் போலீஸ் நிலையத்தில் பணிபுரியும் மூவரை தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 12-ம் தேதி நடைபெற்ற, இந்த மாற்றுத்திறனாளியின் மரணம் பற்றி செய்தி 16-ந்தேதி வரை மக்களை சென்றடையவில்லை.

### ரூ.25 லட்சம் வழங்குங்கள்

அதேபோல், சென்னையில் முகக்கவசம் அணியாத சட்டக்கல்லூரி மாணவர் மீது அபராதம் விதித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய போலீசார், அந்த மாணவரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்று தாக்கியதாக செய்திகள் வருகின்றன. இதுபோன்ற நிகழ்வுகளின் எல்லை மீறல்தான் போலீஸ் நிலைய இறப்புகளாக மாறிவிடும் சூழ்நிலையை உருவாக்குகின்றன.

சேலம் மாவட்டம், கருப்பூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பிரபாகரனின் இறப்புக்கு, தொடர்புடைய போலீசார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன், அவரது குடும்பத்துக்கு ரூ.25 லட்சத்தை அரசு நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும், இந்த அரசின் தவறினால், தனது இன்னுயிரை இழந்த திருத்தணி குப்புசாமியின் குடும்பத்துக்கு ரூ.25 லட்சத்தை நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும் இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

மேலும், நான் ஏற்கனவே கூறியபடி, காவல் துறையில் நேர்மையான அதிகாரிகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு சரியான பணியிடங்களை வழங்குங்கள், சட்டத்தின் ஆட்சியினை நிலைநிறுத்துங்கள், தவறு செய்யும் போலீசார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுங்கள் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

மேலும், உண்மை சம்பவங்களை விமர்சனம் செய்பவர்கள் மீது பொய் வழக்கு போடும் இந்த அரசை கண்டிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தைப்பூசம்: விழுப்புரம் வள்ளலார் அருள் மாளிகையில் ஜோதி தரிசனம்

விழுப்புரம், ஜன.18-

தைப்பூசத்தை முன்னிட்டு விழுப்புரம் வள்ளலார் அருள் மாளிகையில் 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழுப்புரம் வள்ளலார் அருள்மாளிகை அவர்கள் மற்றும் அண்பர்கள் சார்பில் சிதம்பரம் இராமலிங்க அருட்பிரகாச வள்ளலாரின் 151வது ஆண்டை முன்னிட்டு விழுப்புரம் வள்ளலார் அருள் மாளிகை சன்மார்க்க அன்பர்கள் ஒன்றினைந்து 81வது ஆண்டாக தைப்பூச ஜோதி தரிசன பெருவிழா அறக்கட்டளை மேளாளர் ஜெய. அண்ணாமலை தலைமையில் இன்று சிறப்பாக நடைபெற்றது. இன்று காலை 6 மணி, 10 மணிக்கு, பகல் 1 மணிக்கும் ஏழு திரைகள் நீக்கி ஜோதி தரிசனம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இரவு 7 மணி, இரவு 10 மணி மறுநாள் காலை 5.30 மணிக்கு ஜோதி தரிசனம் ஏழு திரைகள் நீக்கி வடலூரில் நடைபெறும் அதே காலநேர முறைப்படி காண்பிக்கப்படுகிறது.

தைப்பூசஜோதி தரிசன பெருவிழாவையொட்டி, நேற்று அருட்பெருஞ்ஜோதி தீபத்தை மணிமேகலை ஜானகிராமன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து சுத்த சன்மார்க்க கொடியேற்றம், சொற்பொழிவு, திரு அருட்பாஇசை நிகழ்ச்சி, வள்ளலார் வரலாறு வில்லுப்பாட்டு, மாணவ மாணவியர்களின் யோகாசனம், பல்சுவை நிகழ்ச்சிகள், சிறப்பு பட்டிமன்றம், பரதநாட்டியம்போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது

இதைத் தொடர்ந்து 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அன்னதான வள்ளல்கள் ஆர். செல்லமுத்து, செ.விக்னேஷ், செ.தினேஷ் ஆகியோர் வழங்கினர். பின்னர் ஆயிரம் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியை அற்புதவேல், ஆயிரம் நபர்களுக்கு போர்வை, வேட்டி, சேலையை வி.ஆர்.பி. தாளாளர் வே.சோழன், ஆயிரம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கும் திருப்பணியை அருட்கொடை வள்ளல்கள் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி அப்ரைசர் பெ. சிவக்குமார், கொட்டியாம்பூண்டி கே.கலியபெருமாள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வள்ளலார் அருள்மாளிகை மேனேஜிங் டிரஸ்டி ஜெய. அண்ணாமலை, நிர்வாகிகள் பலராமன், இராமலிங்கம், சரவணபவன், பாரதி, அழகானந்தம், சிவ.சக்திவேல், பன்னீர்செல்வம், வேல்முருகன் மற்றும் பிரேம் ராஜன், யோகா பயிற்சியாளர் சிவ.சச்சிதானந்தம், வாசுதேவன், ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

இரண்டாவது நாள் விழாவாக ஏழு திரைகள் நீக்கி ஆறு கால ஜோதி தரிசனம் வடலூரில் நடைபெறும் அதே காலநேர முறைப்படி விழுப்புரம் வள்ளலார் அருள் மாளிகையில் நடைபெற்றது.

# 20 மாநிலங்கள் டோலோ-650 மாத்திரை ரூ.567 கோடிக்கு விற்பனை

பெங்களூரு, ஜன. 18-

இந்தியாவில் கொரோனா தொற்று பரவிய மார்ச் 2020 தொடங்கி டோலோ 650 மாத்திரைகளின் விற்பனை ரூ.567 கோடியை கடந்த எட்டியிருக்கிறது என்ற தகவல் பெரும் பேசு பொருளாக மாறியிருக்கிறது.

கொரோனா காலத்தில் ஏற்படும் காய்ச்சல், உடல் வலி, தலை வலிக்கு தீர்வாக 'பாரசிட்டமால்' மாத்திரைகள் மருந்துவர்களால் பரிந்துரை செய்யப்படுகிறது. 'பாரசிட்டமால்' என்பதுதான் வேதியியல் பெயர். இதை சந்தைப்படுத்தும்போது ஒவ்வொரு நிறுவனமும் அதற்கு வெவ்வேறு பெயர்கள், பிராண்ட் நேம்களை சூட்டிக் கொள்கிறார்கள்.

கொரோனா காலத்தில் டோலோ, கால்பால் (calpol) பிராண்டுகளை மருத்துவர்கள் அதிகமாக பரிந்துரை செய்ததாக ஐ.க்யூ.வி.ஐ.ஏ(IQVIA) என்ற சுகாதார நிறுவனம் வெளியிட்ட தகவல் தெரிவிகின்றது. 2021 டிசம்பர் மாதம் டோலோ 650 பிராண்டின் விற்பனை ரூ.28.9 கோடியை ஏட்டியது. இதன் மூலம் டிசம்பர் 2021ல் அதிகம் விற்பனை செய்யப்பட்ட பிராண்டாக டோலோ 650 மாறியுள்ளது. கொரோனா காலத்தில் டோலோ 650 மாத்திரைகளின் மொத்த விற்பனை ரூ.567 கோடியை கடந்துள்ளது.

கொரோனா இரண்டாம் அலை உச்சத்தை அடைந்த ஏப்ரல் 2021 கால்போல் (calpol) பிராண்டின் விற்பனை ரூ.71.6 கோடியாக இருந்தது. இதன் மூலம் கொரோனா இரண்டாம் அலையின்போது அதிகம் விற்பனை செய்யப்பட்ட பிராண்டாக கால்போல் மாறியது. எல்லா வயதினருக்கும் பொருத்தமாக இருப்பதாலும், குறைந்த பக்க விளைவுகளை ஏற்படுத்துவதாலும் டோலோ 650யை மருத்துவர்கள் அதிகம் பரிந்துரை செய்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூர் அண்ணா தி.மு.க. சார்பில் பேருந்து நிலையம் அருகில் எம்.ஜி.ஆர் திருவுருவச் சிலைக்கு பேரூர் கழக செயலாளர் ஏ.ஜி.இரவிச்சந்திரன் முன்னிலையில் கழக அமைப்பு செயலாளர்.முன்னாள் எம்.பி திருத்தணி கோ.அரி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். பள்ளிப்பட்டு ஒன்றிய செயலாளர் டி.டி.சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்திபிரியா சுரேஷ், கோ.குமார், முன்னாள் அரசு வழக்கறிஞர் வி.பி. டில்லி, பேரூர் நிர்வாகிகள் குமரேசன், சக்கரப்பன், வேலு,குமார், பாலன்,சுகாஷினி ஞானசேகர், ஜீவானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முழு ஊரடங்கின்போது ஆட்டோ, டாக்சிகளில் பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிப்பதை தடுக்க நடவடிக்கை

## டிஜிபி சைலேந்திரபாபு சுற்றறிக்கை

சென்னை, ஜன. 18-

முழு ஊரடங்கின்போது பயணிகளிடம் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் அதிக கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு டிஜிபி சைலேந்திரபாபு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இது குறித்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கு டிஜிபி சைலேந்திர பாபு அனுப்பியுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முழு ஊரடங்கின்போது வெளியூர்களுக்கு சென்று ரெயில் நிலையம், பேருந்து நிலையம் திரும்பு பயணிகள் வீடுகளுக்குச் செல்ல ஆட்டோ மற்றும் டாக்சிகள் கிடைக்காமல் அவதியுற்றதாகவும், சில ஆட்டோக்கள் அதிக கட்டணம் வசூலித்ததாகவும் புகார்கள் வந்துள்ளன. எனவே, இனிவரும் முழு ஊரடங்கு நாட்களில் ஆட்டோ மற்றும் டாக்சிகளில் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தில் பயணிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேலும், ஊரடங்கின் போது எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நடைபெறாமல் சிறப்பாக பணியாற்றிய காவல்துறையினருக்கு பாராட்டுகள். முழு ஊரடங்கின்போது பொதுமக்கள் சிலர் பொறுப்பற்ற முறையில் காவலர்களிடம் நடந்துகொண்டதாகவும், சிலர் காவலர்களை தாக்கியபோதும், துறைக்குரிய பொறுப்பு, பொறுமை, மற்றும் மனிதாபிமானத்துடனும் பணியாற்றியதாகவும் பாராட்டு தெரிவித்துள்ளார்.

முழு ஊரடங்கின்போது விதிமுறைகளை மீறியதாக, கடந்த ஜனவரி 9ஆம் தேதி 19,962 வழக்குகளும், கடந்த ஜனவரி 16ஆம் தேதி 14,956 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. விதிகளை மீறியது தொடர்பாக 78.34 லட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.


**பெயர் மாற்றம்**

Ummul Rasika Bhanu, தந்தை பெயர்: Abdul Kadar, தாய் பெயர்: Mahariba Beevi, கணவர் பெயர்: Mohamed Abdul Rahim, பிறந்த தேதி: 04.05.1978, நெ.347/A, 13வது தெரு, பாபா நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Sur Name: "MOHAMED ABDUL RAHIM"**, என்று அழைக்கப்படுகிறேன்.

Ummul Rasika Bhanu

**பெயர் மாற்றம்**

VIJAYA KRISHNAN, தந்தை பெயர்: Ezhilarasan, பிறந்த தேதி: 07.02.2000, நெ.1053, எழில் நகர், பள்ளிப்படை, சிதம்பரம், கடலூர் - 608602, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VijayaKrishnan, Ezhilarasan,** என்று அழைக்கப்படுகிறேன்.

**Given Name: Vijaya Krishnan, Sur Name: Ezhilarasan.**

VIJAYA KRISHNAN

**பெயர் மாற்றம்**

KASTHOORI DAVID, கணவர் பெயர்: David (Late), பிறந்த தேதி: 11.10.1958, (சொந்த மாவட்டம்: சென்னை), நெ.14/13, 6வது குறுக்கு தெரு, ரங்கநாதபுரதம், மேற்கு தாம்பரம், சென்னை- 600 045, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KASTHURI RAGHUVEL**, என்று அழைக்கப்படுகிறேன்.

KASTHOORI DAVID

**பெயர் மாற்றம்**

Arun Kumar Velladurai, தந்தை பெயர்: Vellai Durai, பிறந்த தேதி: 20.09.1989, நெ.47/80A, வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு, வில்லிவாக்கம், சென்னை - 600 049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ARUN KUMAR VELLAI DURAI**, என்று அழைக்கப்படுகிறேன்.

Arun Kumar Velladurai

**பெயர் மாற்றம்**

Katherine Leah Celistine Meyers, தந்தை பெயர்: Anthony Meyers, பிறந்த தேதி: 04.09.2001, நெ.27, Demonte Avenue, முரளி ஹாஸ்பிட்டல் எதிரில், மாதவரம், சென்னை- 600 060, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KATHERINE MEYERS**, என்று அழைக்கப்படுகிறேன்.

Katherine Leah Celistine Meyers

**பெயர் மாற்றம்**

Sanjay Jagatheesan Vasanthakumar, தந்தை பெயர்: Vasanthakumar Jagadeesan, பிறந்த தேதி: 19.07.2000, நெ.11/1, ராஜாஜி நகர், 4வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600 049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SANJAY JAGADEESAN VASANTHAKUMAR,** என்று அழைக்கப்படுகிறேன்.

Sanjay Jagatheesan Vasanthakumar

**பெயர் மாற்றம்**

Shiva Murugaraj Kalaiselvi Shiva, தந்தை பெயர்: Murugaraj, பிறந்த தேதி: 07.09.1999, நெ.22/8, நேதாஜி தெரு, சைதாப்பேட்டை, சென்னை- 600 015, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHIVA M K**, என்று அழைக்கப்படுகிறேன்.

Shiva Murugaraj Kalaiselvi Shiva

**பெயர் மாற்றம்**

Shakul Hameed Mohamed Meeran, தந்தை பெயர்: Mohamed Meeran, பிறந்த தேதி: 28.04.1980, நெ.51 OSH ரோடு, ஆஞ்சநேய நகர், ராயபுரம், சென்னை- 600013, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHAHUL HAMEED MOHAMED MEERAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Shakul Hameed Mohamed Meeran

**பெயர் மாற்றம்**

Aman Bisani Srivallabh Bisani, தந்தை பெயர்: Srivallabh Bisani, பிறந்த தேதி: 20.12.1999, நெ.27, மகாத்மா காந்தி தெரு, விஜிஎன் நகர், பேஸ் - 4, நொளம்பூர், சென்னை- 600 095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **AMAN BISANI**, என்று அழைக்கப்படுகிறேன்.

Aman Bisani Srivallabh Bisani

**பெயர் மாற்றம்**

S RUWAID AHMED, தந்தை பெயர்: John Suresh Kumar, பிறந்த தேதி: 11.7.2017, (சொந்த மாவட்டம்: திருவள்ளூர்), ப.நெ.741D, பு.நெ.650, டி.எஸ்.ஆர். நகர், திருவொற்றியூர், சென்னை - 600019, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **ZAID AHMED,** என்று அழைக்கப்படுகிறார்.

**K Shaheer Ahmed,**
தந்தை


# தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

CIN: - L17111TZ1977PLC000776

பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்-636 302.

### 31 டிசம்பர் 2021ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| வ எண் | | விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 30.09.2021 (தணிக்கை யாகாதது) | முடிந்த 3 மாதங்கள் 31.12.2021 (தணிக்கை யானது) | முடிந்த 3 மாதங்கள் 31.12.2020 (தணிக்கை யாகாதது) | கடந்தாண்டு முடிந்த இதே 9 மாதங்கள் 31.12.2020 (தணிக்கை யாகாதது) | முடிந்த 9 மாதங்கள் 31.12.2021 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31.03.2021 (தணிக்கை யானது) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஏ) | செயல்பாடுகளிலிருந்து வருமானம் | 54.78 | 57.98 | 47.23 | 118.74 | 159.36 | 166.78 |
| | பி) | இதர வருமானம் | - | 1.60 | - | 1.18 | 1,60 | 81.41 |
| | | **மொத்த வருமானம்** | **54.78** | **59.58** | **47.23** | **119.92** | **160.96** | **248.19** |
| 2. | | **செலவுகள்** | | | | | | |
| | ஏ) | கச்சா பொருட்கள் உபயோகம் | - | - | - | - | - | - |
| | பி) | வர்த்தக பொருட்கள் வாங்கியது | - | - | - | - | - | - |
| | சி) | முடிக்கப்பட்ட பொருட்களின் இருப்புகளில் மாற்றங்கள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வர்த்தக இருப்பு | - | - | - | - | - | - |
| | டி) | ஊழியர் நல செலவுகள் | 9.64 | 12.31 | 21.22 | 30.23 | 30.29 | 43.00 |
| | இ) | நிதி செலவுகள் | 64.64 | 61.43 | 44.03 | 113.42 | 139.11 | 169.05 |
| | எப் | தேய்மானம் மற்றும் அமார்டைசேஷன் செலவுகள் | 1397 | 13.60 | 1534 | 47.45 | 45,23 | 64.78 |
| | ஜி) | மற்ற செலவுகள் | 22.27 | 174.50 | 38.05 | 68.61 | 216.05 | 78.54 |
| | | **மொத்த செலவுகள்** | **110.52** | **261.84** | **118.64** | **259.71** | **430.68** | **355.37** |
| 3. | | நிதி கட்டணங்களுக்கு பின் ஆனால் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் லாபம்/ (நஷ்டம்) (1-2) | (55.74) | (202.26) | (71.41) | (139.79) | (269.72) | (107.18) |
| 4. | | விலக்கு அயிட்டங்கள் | - | - | - | - | 170,,12 | 6.96 |
| 5. | | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) (3-4) | (55.74) | (202.26) | (71.41) | (139.79) | (439.84) | (114.14) |
| 6. | | வரி செலவுகள் | - | - | - | - | - | - |
| 7. | | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | (55.74) | (202.26) | (71.41) | (139.79) | (439.84) | (114.14) |
| 8. | | இதர விரிவான வருமானம் | | | | | | |
| | i) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள் | - | - | - | - | - | - |
| | ii) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - | - | - |
| | i) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் பொருட்கள் | - | - | - | - | - | - |
| | ii) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் பொருட்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - | - | - |
| 9. | | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (7+8) | (55.74) | (202.26) | (44.35) | (139.79) | (439.84) | (114.14) |
| 10. | | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒன்று ரூ. 10/-) | 576.28 | 576.28 | 576.28 | 576.28 | 576.28 | 576.28 |
| 11. | | மறுமதிப்பீட்டு நீங்கலான ரிசர்வுகள் பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி | - | - | - | - | - | - |
| 12. | | ஒரு பங்கு சம்பாத்தியம் (முகமதிப்பு ஒன்றுக்கு ரூ. 10-) (வருடாந்திரமல்ல) | | | | | | |
| | | அடிப்படை மற்றும் டைலூட்டட் | (0.97) | (3.51) | (1.24) | (2.43) | (7.63) | (1.98) |

### ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| | விவரங்கள் | 31.12.2021 | 31.03.2021 |
|---|---|---|---|
| | ஆஸ்திகள் | | |
| (1) | நடப்பு சாரா ஆஸ்திகள் | | |
| | ஏ. சொத்து, நிலம் மற்றும் இயந்திரங்கள் | 1 126.95 | 1 172.19 |
| | பி. நடைபெற்ற வரும் மூலதன வேலை | 50.50 | -- |
| | சி. இதர இன்டேஜிபிள் ஆஸ்திகள் | 0.10 | 0.10 |
| | டி. நிதி ஆஸ்திகள் | | |
| | i) கடன் மற்றும் முன் பணங்கள் | 10.09 | 9.80 |
| | ii) இதர நடப்பு சாரா சொத்துக்கள் | 10.96 | 10.96 |
| | இ. ஒத்திவைக்கப்பட்ட வரி ஆஸ்தி (நிகரம்) | 7.62 | 7.62 |
| (2) | நடப்பு ஆஸ்திகள் | | |
| | ஏ. பொருள் விவரப் பட்டியல் | - | - |
| | பி. நிதி ஆஸ்திகள் | | |
| | i) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை | 70.49 | 36.62 |
| | ii) வர்த்தகம் பெறுதல்கள் | 94.25 | 246.61 |
| | iii) மற்றவை | 48.31 | 49.79 |
| | சி. நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்) | 27.65 | 30.28 |
| | மொத்த ஆஸ்திகள் | **1 446.92** | **1 563.97** |
| | ஈக்விடி மற்றும் பொறுப்புகள் | | |
| | ஈக்விடி | | |
| | ஏ. ஈக்விடி பங்கு மூலதனம் | 576.28 | 576.28 |
| | பி. இதர ஈக்விடி | (1 450.09) | (1 010.26) |
| | பொறுப்புகள் | | |
| 1. | நடப்பு சாரா பொறுப்புகள் | | |
| | ஏ. நிதி பொறுப்புகள் | | |
| | i) கடன்கள் | 1 843.98 | 1 699.95 |
| | பி. இதர நடப்பு சாரா பொறுப்புகள் | 156.45 | 138.65 |
| 2. | நடப்பு பொறுப்புகள் | | |
| | ஏ. நிதி பொறுப்புகள் | | |
| | i) வர்த்தகம் செலுத்தல் | 126.27 | 10.56 |
| | ii) இதர நிதி பொறுப்புகள் | 194.04 | 148.79 |
| | மொத்தம் சமம் மற்றும் பொறுப்புகள் | **1 446.92** | **1 563.97** |

குறிப்புகள்:

1. கம்பெனி குத்தகை வாடகை வருமானம் என்ற ஒரே பகுதியாக செயல்படுகிறது. எனவே தனி அறிக்கை தேவையில்லை.
2. 31.12.2021 அன்று முதலீட்டாளர் புகார் குறித்த நிலை: காலாண்டு துவக்கத்தில் நிலுவை: இல்லை. காலாண்டில் தீர்க்கப்பட்டது : இல்லை, காலாண்டில் டிஸ்போஸ் செய்யப்பட்டது: இல்லை, தீர்க்கப்படாமல் உள்ளது : இல்லை.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு முடிவுகள் ரீகுரூப் செய்யப்பட்டுள்ளன.
4. மேற்கண்ட முடிவுகள் 10 ஜனவரி 2022 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இடம் : சேலம்
தேதி: 10.01.2022

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
நிர்வாக இயக்குனர்